ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2406/02 - 2024 ඔක්තෝබර් මස 14 වැනි සඳුදා - 2024.10.14

*2406/02 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 14 ஆந் திகதி திங்கட்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I) - பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

***2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டம்***

*2 ஆம் பிரிவு மற்றும் 5 ஆம் பிரிவின் கீழான கட்டளை*

1. 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க (விசேட வியாபாரப் பண்டங்கள்) அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி, பொருளாதார அபிவிருத்தி, கொள்கை வகுத்தல், திட்டமிடல் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் அநுர குமார திஸாநாயக்க ஆகிய நான், இந்தக் கட்டளை மூலம் இங்குள்ள அட்டவணையின் நிரல் I இல் குறிப்பிடப்பட்டுள்ள பண்டத்தைப் பொருத்தமட்டில், அந்த அட்டவணையின் நிரல் II இல் குறிப்பிடப்பட்டுள்ள விகிதத்தில் விசேட வியாபாரப் பண்ட அறவீடொன்றினை விதிக்கிறேன்.

1A — PG 6904 - 429 (2024/10)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**அட்டவணை**

| நிரல் I | | | | நிரல் II |
|---|---|---|---|---|
| பண்டத்தின் விபரம் | | | | விசேட வியாபாரப் பண்ட அறவீடு |
| | இ. மு. தலைப்பு | இ. மு. குறியீடு | விபரம் | |
| 1 | 03.02 | | 03.04 தலைப்பைக் கொண்ட மீன் துண்டுகள் மற்றும் பிற மீன் இறைச்சி நீங்கலான மீன், புதிய அல்லது குளிரூட்டப்பட்டவை | ஒரு கிலோவிற்கு 10% அல்லது ரூபா 400.00, தீர்வைத் தொகை எது அதிகமோ அது. |
| | 03.03 | | 03.04 தலைப்பைக் கொண்ட மீன் துண்டுகள் மற்றும் பிற மீன் இறைச்சி நீங்கலான மீன், குளிரூட்டப் பட்டவை | ஒரு கிலோவிற்கு 10% அல்லது ரூபா 400.00, தீர்வைத் தொகை எது அதிகமோ அது. |
| 2 | 03.05 | 0305.59.10 | மாலத்தீவு மீன் மற்றும் அதன் மாற்றுகள் | கி. கி. ஒன்று ரூபா 302.00 |
| 3 | 07.13 | 0713.40.11 | மைசூர் பருப்பு (சிவப்பு பருப்பு) - முழுமையானது | கி. கி. ஒன்று 25 சதம் |
| | | 0713.40.12 | மைசூர் பருப்பு (சிவப்பு பருப்பு) - பிளந்தது | கி. கி. ஒன்று 25 சதம் |
| | | 0713.40.21 | மஞ்சள் பருப்பு - முழுமையானது | கி. கி. ஒன்று 25 சதம் |
| | | 0713.40.22 | மஞ்சள் பருப்பு - பிளந்தது | கி. கி. ஒன்று 25 சதம் |
| 4 | 08.04 | 0804.50.50 | மங்குசுத்தான் - புதியது | கி. கி. ஒன்று ரூபா 200.00 |
| | | 0804.50.60 | மங்குசுத்தான் - உலர்ந்தது | கி. கி. ஒன்று ரூபா 200.00 |
| 5 | 08.10 | 0810.50 | கிவிப்பழம் | கி. கி. ஒன்று ரூபா 175.00 |

2. 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் அடிப்படையில், உள்ளூர் ரின் மீன் உற்பத்தியாளர்களால் ரின் மீன் உற்பத்திக்காக கடற்றொழில் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சின் செயலாளரது பரிந்துரையின் அடிப்படையில் மேலே உள்ள அட்டவணையில் பட்டியலிடப்பட்ட 0303.54 இயைபு முறைக் குறியீட்டின் கீழ் வகைப்படுத்தப்பட்ட மெக்கரல் *(Scomber scombrus, scomber australasicus, scombe japnicus)* மற்றும் 0303.55 இயைபு முறைக் குறியீட்டின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ள ஜக் அன்ட் ஹோர்ஸ் மெக்கரல் *(Trachurus spp.)* என்பவற்றின் இறக்குமதியின் மீது கிலோ கிராம் ஒன்றுக்கு ரூபா 400 அல்லது ஏற்புடைய விசேட வியாபாரப் பண்ட அறவீட்டில் 10% இலிருந்து கிலோ கிராம் ஒன்றுக்கு ரூபா 6 இனை அறவிட்டதன் பின்னர் மீதித் தொகையினை தள்ளுபடி செய்வதற்கான கட்டளை ஒன்றினை இத்தால் ஆக்குகின்றேன்.

3. இந்தக் கட்டளையானது, 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (3) ஆம் உப பிரிவின் ஏற்பாடுகளுக்குட்பட்டு 2024, ஒற்றோபர் 14 ஆந் திகதி முதல் 2024, திசெம்பர் 31 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்கு செல்லுபடியாதல் வேண்டும்.

**அநுர குமார திஸாநாயக்க,**
நிதி, பொருளாதார அபிவிருத்தி, கொள்கை வகுத்தல்,
திட்டமிடல் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர்.

நிதி, பொருளாதார அபிவிருத்தி, கொள்கை வகுத்தல்,
திட்டமிடல் மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சு,
கொழும்பு 01,
2024, ஒற்றோபர் 14.

EOG 10 - 0122

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.